குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**MC.No.2/2026**

வழக்கு சாட்சி ம.சா.1

2026ம் ஜுன் மாதம் 4 –ம் நாள் மனுதாரர்தரப்பு சாட்சியாகிய 1வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ராஜேந்திரன், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தமிழசெல்வி | தொழில் | |
| த/பெ(அ) க/பெ. | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

நாள்: 04.06.2026

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என்னிடம் காட்டப்படும் LIC ஆவணம் 2ம் மனுதாரர் மீது எதிர்மனுதாரர் LIC பாலிசி போட்டு வருவது தான் என்றால் சரிதான். அதன் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியிடு செய்யப்படுகிறது. **LIC ஆவணத்தின் நகல்(அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு) எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் Post Office Savings 3ம் மனுதாரர் மீது எதிர்மனுதாரர் Post Office Savings போட்டு வருவது தான் என்றால் நான் தான் ஆரம்பித்து வைத்தேன். நான் வந்த பின் அவர் பணம் செலுத்துகிறார். அதன் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியிடு செய்யப்படுகிறது. **Post Office Savings ஆவணத்தின் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு) எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இன்றைய நாள் வரை எதிர்மனுதாரர் தான் மேற்கொண்ட தொகையை செலுத்திவருகிறார் என்றால் நான் அவருடன் இருந்தவரை மகளுக்கு பணத்தை நான் தான் செலுத்திவந்தேன். மகனுக்கு தான் எதிர்மனுதாரர் செலுத்தி வருகிறார். என்னுடைய மனுவில் நான் வேலைக்கு செல்வதையும் எவ்வளவு சம்பளம் சம்பாதிக்கிறேன் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், நான் தற்போது தையல் வேலைக்கு சென்று வருகிறேன். 2ம் மனுதாரரின் கல்வி செலவுகள் அனைத்தும் எதிர்மனுதாரர் தான் செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல, போன வருடம் பாதி கல்வி செலவுகள் நான் தான் செலுத்தினேன். அதற்கு முந்தைய வருடங்களும், இந்த வருடமும் எதிர்மனுதாரர் தான் செலுத்தி வந்தார் என்றால் நான் அவருடன் இருந்த வரை நானும் தான் செலவு செய்தேன். இந்த விபரங்களை என் மனுவிலும், பிரமாணப்பத்திரக்கையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு மாத வருமானம் குறித்து மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல நான் தையல் வேலைக்கு செல்கிறேன் வாரம் ரூ.2000/– கிடைக்கும். எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழந்த காலகட்டத்தில் நான் எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றும், இன்று வரை எதிர்மனுதாரர் தான் குழந்தைகளுக்கு செலவுகள் அனைத்தும் இன்று வரை செய்துவருகிறார் என்றால் சரியல்ல. நான் முதல் திருமணத்தை மறைத்து

விவாகரத்து வாங்காமல் அதை மறைத்து இரண்டாவதாக எதிர்மனுதாரரை திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை இரண்டாவது திருமணம் தெரிந்துதான் செய்து கொண்டார். கடந்த ஒரு மாதத்திற்க முன்பு தான் உங்களுடைய உறவினர் எதிர்மனுதாரரிடம் முதல் திருமணத்தையும் கெடுத்துக்கொண்டு இரண்டாவது திருமணத்தையும் கெடுத்துக்கொண்டு வந்துள்ளார் என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை இரண்டாவது திருமணம் தெரிந்துதான் செய்து கொண்டார். உண்மை தெரியாத காரணத்தினால் தான் எதிர்உரையிலும், அவர் தாக்கல் செய்துள்ள விவாகரத்து மனுவிலும் மேற்படி விபரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு அந்த விபரங்கள் தெரியும். நான் முதல் கணவருடன் தொடர்பில் இருந்து வருவதால் தான் எதிர்மனுதாரருடன் சண்டையிட்டு வருகிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் ஒரு சந்தேகபேர்வழி. விவாகரத்து பின்னிட்டு நான் என் முதல் கணவரை பார்க்கவேயில்லை. நான் முதல் கணவரிடம் விவாரத்து வாங்கவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து எழுதி வாங்கிவிட்டோம். முதல் திருமணத்தை மறைத்து எதிர்மனுதாரரை இரண்டாவது திருமணம் செய்து கொண்டதால் எதிர்மனுதாரர் எனக்கு எந்த ஒரு ஜீவனாம்சம் கொடுக்க தேவையில்லை என்றால் சரியல்ல. குழந்தைகளுகக்கு செலவுகள் செய்ய எதிர்மனுதார் தயாராக உள்ளார் என்றும், என்னுடைய நடவடிக்கை சரியில்லை என்பதால் குழந்தைகளை தன் வசம் பெற மாவட்ட நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. எதிர்மனுதார் என்னை கொடுமை படுத்தவில்லை என்றும் நான் தான் எதிர்மனுதாரரிடம் இருந்து பணம் பறிக்கும் நோக்கத்தோடு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரிந்து 1 1/2 வருடம் ஆகிறது என்னால் குழந்தைகளைவைத்து சமாளிக்க முடியவில்லை அதனால் தான் மனு தாக்கல் செய்தேன். குழந்தைகளுக்கு தேவையான அனைத்தும் எதிர்மனுதாரர் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. குழந்தைகளுக்கு கல்வி செலவு மட்டும் தான் செய்தார். இந்த மனுவை பொறுத்தவரை நான் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல.